**2017 நவம்பர் 15ஆந் திகதியன்று அனைத்துலக காலாந்தர மீளாய்வு செயற்குழுவின் 28ஆம் அமர்வில் இலங்கை மீளாய்வு செய்யப்படவுள்ளது**

அனைத்துலக காலாந்தர மீளாய்வின் கீழான இலங்கையின் அறிக்கையானது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் செயற்குழுவினால் 2017 நவம்பர் 15ஆந் திகதி ஜெனீவாவில் இடம்பெறும் அனைத்துலக காலாந்தர மீளாய்வின்போது கவனத்திற்கொள்ளப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஒவ்வொரு உறுப்பு நாடுகளினதும் மனித உரிமைகள் தொடர்பான பதிவுகளை கூர்ந்து மீளாய்வு செய்வதற்கான ஒரு செயன்முறையாக அனைத்துலக காலாந்தார மீளாய்வானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் 2006ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் பட்டயம், மனித உரிமைகள் மீதான சர்வதேச பிரகடனம், நாடொன்று தரப்பினராகவுள்ள மனித உரிமைகள் ஆவணம் மற்றும் ஏனைய மூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகள் தொடர்பில் ஒவ்வொரு நாட்டினதும் கடமைகள் மற்றும் ஈடுபாடுகளின் அடிப்படையில் இந்த மீளாய்வு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்படுகின்றது. நடைமுறைச் செயற்பாட்டின் போது, மீளாய்வின் கீழுள்ள நாடு அதன் மனித உரிமைகளின் பதிவுகள் மீதான எழுத்து மூலமான அறிக்கையொன்றை சமர்ப்பித்து, பேரவையின் முன்னிலையில் சமூகமளிப்பதுடன், ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஏனைய உறுப்பு நாடுகளிடமிருந்து குறித்த நாட்டின் மனித உரிமைகள் தொடர்பில் பரிந்துரைகளையும் பெற்றுக்கொள்ளும். மீளாய்வின் கீழுள்ள நாடு இந்த பரிந்துரைகளை "ஏற்றுக்கொள்ளலாம்" அல்லது "குறித்துக்கொள்ளலாம்". ஏற்றுக்கொள்வதானது எதிர்கால அறிக்கையிடல்களுக்கு அடிப்படையாக அமையும்.

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அனைத்து உறுப்பு நாடுகளினதும் மனித உரிமைப் பதிவுகள் மீளாய்வு மற்றும் ஆய்வு செய்யப்படுவதற்கான ஒரேயோரு நடைமுறை அனைத்துலக காலாந்தார மீளாய்வேயாகும். இலங்கையின் முதலாவது அனைத்துலக காலாந்தார மீளாய்வுச் சுழற்சி 2008ஆம் ஆண்டிலும், இரண்டாவது சுழற்சி 2012ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டன. நவம்பர் 15ஆந் திகதி முன்னெடுக்கப்படவுள்ள மீளாய்வு இலங்கையின் மூன்றாவது சுழற்சிமுறையானதாக அமைவதுடன், இலங்கையுடன் இணைந்து குறித்த 28ஆம் செயற்பாட்டுக் குழுவில் நவம்பர் 6 தொடக்கம் 17ஆந் திகதி வரையான காலப்பகுதியில் பின்வரும் நாடுகளும் மீளாய்வு செய்யப்படவுள்ளன. அவையாவன: ஆர்ஜன்டீனா, பெனின், செச்சியா, காபொன், கவுதமாலா, ஜப்பான், பாகிஸ்தான், பேரு, கொரியக் குடியரசு, சுவிட்சர்லாந்து, உக்ரைன் மற்றும் ஸம்பியா.

இலங்கை தேசிய அறிக்கை பின்வரும் ஒன்லைன் மூலமாக கிடைக்கப்பெறுகிறது: http://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G17/247/34/PDF/G1724734.pdf?OpenElement

webtv.un.org எனும் வலைத்தளம் ஊடாக மீளாய்வு நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படும்.

தேசியக் கொள்கை என்ற ரீதியாக, இலங்கையின் அனைத்து குடிமக்களினதும் மனித உரிமைகளையும் மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் எனும் தேசிய கூட்டு அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுடன், மீளாய்வுக்கான இலங்கை தூதுக்குழு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா அவர்களினால் தலைமை தாங்கப்படவுள்ளது. இந்தக் குழுவில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, சட்ட மா அதிபர் திணைக்களம், ஜனாதிபதி அலுவலகம் மற்றும் ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர தூதரகம் ஆகியவற்றின் அதிகாரிகள் இடம்பெறுவர்.

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது அனைத்துலக காலாந்தர மீளாய்வினைத் தொடர்ந்து, இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிபாரிசுகளின் பிரிவுகள் இலங்கையின் தேசிய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் மற்றும் கல்முனை பிரதேசங்களிலுள்ள பொது ஆலோசனைகள் மற்றும் ஒன்லைன் ஆலோசனைகள் மற்றும் தபால் மூலமான ஆலோசனைகள் உள்ளடங்கலாக பங்குதாரர்கள் அனைவரினதும் பரந்துபட்ட ஆலோசனைகளைத் தொடர்ந்து உத்தேச தேசிய அறிக்கை வரையப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகள் அனைவருடனும் இலங்கை தொடர்ந்தும் ஆக்கபூர்வமாக ஈடுபடவுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
கொழும்பு

2017 நவம்பர் 13ஆந் திகதி